# திமிறி எழட்டும்........

**28.02.2025 அன்று சென்னை, கொட்டிவாக்கத்தில் நடைபெற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாள் விழாவில், தலைவர் குறித்துப் பாடிய கவிதை)**



பிறந்த நாளிலும் உன்னை வாழ்த்திடச்
சிறந்த தருணம் வாய்த்திட வில்லை!
நாளொரு மேனி பொழுதொரு வண்ணம்
வாளும் வேலுமாய் வந்திடும் பகைகள்

ஆட்சிக்கு வந்த அன்றே கொடுங்கோல்
ஆட்சி புரிந்தது கொரானா எனும்நோய்!

இறுக்கம் முகத்தில் இரக்கம் நெஞ்சில்
உறக்கம் இன்றியே உழைத்தாய் தலைவா!

கொடிய நோயில் வாடிய மக்களைக்
கடிதில் சென்று கண்டாய் நேரில்!

காப்புடை அணிந்து களத்தில் இறங்கினாய்
போய்ப் புகுந்தாய்நீ அதே வார்டில்

எந்த உடையிலும் அன்றுநீ அணிந்த
அந்த உடையே அற்புதம் தலைவா!

அதற்குப் பின்னும் ஆயிரம் சிக்கல்கள்
எதற்கு வம்பென்று ஒதுங்கிட வில்லை!

எத்தனை எத்தனை எதிரிகள் முளைத்தார்
எத்தனை எத்தனை இன்னல் விளைத்தார் !

அதத்தனை யும்தூள் தூளாக்கி விட்டு
அண்ணாவைப் போல் அமைதி காக்கிறாய்!

வாழ்வின் சுவைகளை மறந்தே நானும்
சூழ்நிலைக் கைதி ஆனேன் என்றும்

முதலமைச்சர் பதவியும் பொறுப்பும் தலையில்
முள்ளின் மகுடமாய் உறுத்துவ தாகவும்

அன்றே சொன்னார் அறிஞர் அண்ணா
இன்றோ அதனை நேரில் பார்க்கிறோம்!

எக்கணமும் எப்பொழுதும் இத்தமிழ கத்தின்
மக்களையே உன்நெஞ்சம் நினைத் திருக்க

எப்போது சிரித்தாய் எங்கள் தலைவா
எப்போ தாவது எங்கள் மழலைகள்

அப்பா என்றுனை அழைத்திடும் அந்த
அழகில் மட்டுமே மயங்கிச் சிரித்தாய்!

இப்போதும் மேடைக்கு வாழ்த்தநான் வரவில்லை
ஒப்பேதும் இல்லாத உன்றன் பின்னால்

எப்போதும் சிப்பாயாய் நிற்போம் என்றே
ஒப்புதல் கொடுப்பதற்கே ஓடி வந்தேன்!

களத்தி லேயே உன்கால்கள் நிற்பதால்
கழுத்துக்கு மாலை கொண்டுவர வில்லை!

எங்களில் ஒருவராய் நீங்கள் இருப்பதால்
உங்களைத் தனித்து வாழ்த்திட வில்லை!

இந்தித் திணிப்பு மற்றும் தொகுதி
மறுசீ ரமைப்பு என்றே இன்று

அணிவகுத் திருக்கும் ஆறாத் துயர்களைத்
துணிவுடன் எதிர்க்கும் உன்பின் நிற்போம்!

உயிராம் மொழியைக் காத்திட எங்கள்
உயிரையும் தருவதாய் உறுதி ஏற்போம்!

தென்னாட்டு மக்கள் தீராதி தீரர்
எந்நாளும் எவர்க்கும் அடிபணியார் என்றே

அத்தனை உறுதியாய் அன்றுநீ சொன்னதைச்
சித்த ராமையாவும் வழிமொழிந் துள்ளார்!

வடக்கு வாழ்ந்திட தெற்கு தேய்ந்திட
அடக்கி ஆண்டஅக் காலங்கள் மறைந்தன!

அருந்தமிழ் நாடும் ஆந்திர கேரளம்
கருநா டகமும் கைகளைச் சேர்ப்போம்!

குமுறி அழுவது கோழைகள் வீடு
திமிறி எழட்டும் திராவிட நாடு!!



பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**




தருமபுரி மாவட்டம் கம்பை நல்லூரில் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் இறந்த 3 பெண்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி தலா 4 லட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் வழங்கினர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்:

# ஆற்காட்டில் நகர தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார்!

ஆற்காடு,மார்ச்.3

ஆற்காட்டில் நகர தி.மு.க. சார்பில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 72வது பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு நகரச் செயலாளர் ஏ.வி.சரவணன் தலைமை தாங்கினார். நகர அவைத் தலைவர் பி.என்.எஸ். ராஜசேகரன் வரவேற்றார்.

முன்னாள் நகராட்சி துணைத் தலைவர் பொன். ராஜசேகர், துணை செயலாளர்கள் சி. சொக்கலிங்கம் ஏ.ஜி ரவிக்குமார், எஸ். ருக்குமணி, நகரப் பொருளாளர் ஏ.கே.கஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.கோபு, ஏ.சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப் பேட்டை ஆர். காந்தி கலந்து கொண்டு அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து கேக் வெட்டி நகர செயலாளர் உள்ளிட்ட அனைவருக்கும் வழங்கினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கினார்.

முன்னதாக ஒரே இலக்கு தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்னும் உறுதிமொழியை அமைச்சர் ஆர்.காந்தி கூற அனைவரும் எடுத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கப்பட்டது.

விழாவில் மாநில சுற்றுச்சூழல் துணை செயலாளர் ஆர். வினோத் காந்தி, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் பி.என்.எஸ்.சரவணன், நகராட்சித் தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன், துணைத் தலைவர் பவளக்கொடி சரவணன், தொமுச பொதுச்செயலாளர் ரமேஷ், நகராட்சி கவுன்சிலர்கள் முன்னா, ஆனந்தன், ராஜலட்சுமி துரை, குணா, குமரன் விஜயகுமார் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஆற்காடு நகர திமுக அலுவலகம் அருகில் இருந்து திமுக கொடி ஏந்தி ஊர்வலமாக வந்தனர்.

### மலேசியா தளபதி பேரவை சார்பில்

# கோலாலம்பூரில் முதல்வர் பிறந்த நாள் விழா!

கோலாலம்பூர், மார்ச். 3–

முதல்வர்.மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு. மலேசியா தளபதி பேரவை சார்பாக. செயலாளர்.ஹச்.எம்.ஜெய்னுதீன். ஆலோசனையின் படி. தைப்பிங் கில். பொருளாளர் .ஜே. சிவானந்தம் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது.

சென்னப்பன். ரமேஷ். மூர்த்தி. சாகுல் ஹமீது ஏற்பாட்டில் அதைத் தொடர்ந்து. கோலாலம்பூர். சென் தூள்திமூர்.ஏ. சாதிக்பாட்சா.டிவிஒய். தலைமையில். இனிப்புகள் வழங்கப் பட்டது. மகளிர் அணியை சார்ந்த. கதீஜா பீவி. சபியத்நிஷா. நசீமா பேகம். பார்வதி. சிங்கப்பூர் நூர்ஜகான். விஜயா பிரியா. தனுஷா. உமேரா. அசினா. தேவி. கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து. கோலாலம் பூர் தலைநகரம். மலேசியா உதயநிதி ஸ்டாலின் பேரவை. தலைவர்.எம். கே. முகமது ஜெய்லானி தலைமையில். மதிய உணவு வழங்கப்பட்டது. ஹமீது. மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர். சிரம்பானில். எஸ் வினோத். மேல திருமலைராஜபுரம். தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. அய்யனார். சிவக்குமார். மதிவாணன். செல்லப்பா. அதைத்தொடர்ந்து. ஜொகூர். சிம்பாரங்கம். அருண் தலைமையில்.இனிப்புகள்வழங்கப் பட்டது.சேட்டு.ரம்யா.பர்வீன்.ஏராளமானநிர்வாகிகள்.கலந்துகொண்டனர். கிள்ளாங்கில்.பொதுக்குழு உறுப்பினர்.க.புருசோத்தமன். தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. ரமேஷ் தனபால். வேல்முருகன் கலந்து கொண்டனர். துபாய். ஜபெல் அலி. தலை நகரத்தில். எஸ் காதர் மீரான். தோப்புத்துறை. அவர்கள் தலைமையில் இனிப்புகள் வழங்கப் பட்டது.

சவுதியில்.ஆசிப்அலி சேட்டு தலைமையில். மதிய உணவு வழங்கப்பட்டது. டேய் துபாய் ரிவேரா ஹோட்டல்.ஆர். ஜாகிர் உசேன் தலைமையில் மதிய உணவு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து . தமிழகத்திலும். மதுரையில். ஒருங்கிணைப்பாளர்.உமர்ஷா. தலைமையில். இனிப்புகள் வழங்கப்பட்டது.

நாகேந்திரன். புதுக்கோட்டையில். தகவல் தொழில்நுட்ப இணைச் செயலாளர். நிஜாம்கான் தலைமையில். மதிய உணவு வழங்கப்பட்டது. பர்சாத்அலி. ராமு ஜெயசீலன். திருவையாறு மடம். தெய்வானை தலைமையில். விவசாயிகளுக்கு. உணவுகள் வழங்கப்பட்டது. கனிமொழி பவித்ரா. ரேகா. சுந்தர்ராஜன். இதனைத் தொடர்ந்து. அசாருதீன் தலைமையில். இனிப்புகள் வழங்கப்பட்டது. மார்க்கெட் பாஸ்கர். தயாளன் பாபு. ஆரிஃப் கான். தமிழகத்திலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, நெய்வேலி என்.எல்.சி, தொ.மு,ச சார்பில், கழகக் கொடியேற்றியும், தொ.மு.ச, கொடியேற்றியும், என்.எல்.சி ஊழியர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும், இதுதான் ஒரே இலக்கு, என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் தொ.மு.ச பேரவை இணை செயலாளரும், என்.எல்.சி ,தொ.மு.ச பொதுச்செயலாளர் என்.பாரி, தலைவர் பா.திருமாவளவன், பொருளாளர் ஆர்.ஐயப்பன், அலுவலக செயலாளர் ஆர்.ஜெரால்டு, நெய்வேலி நகர செயலாளர் வி.குருநாதன், நகர அவைத்தலைவர் நன்மறபாண்டியன், பொருளாளர் மதியழகன், மாவட்ட பிரதிநிதி ரவிச்சந்திரன், என்.எல்.சி ,தொ.மு.ச துணைத் தலைவர்கள், பகுதி செயலாளர்கள் செயற்குழு உறுப்பினர்கள், உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏர்வாடி அலிசேக் மன்சூர்

**மார்ச் 3 (2013)**



தி.மு.க. தொடக்க நாட்களிலேயே தென் மாவட்டங்களில் கழகக் கொள்கைகளைப் பரப்புவதில் மாணவப் பருவம் முதல் ஆர்வமுடன் ஈடுபட்ட சிறந்த பேச்சாளரும் – கழகத்தின் மூத்த முன்னோடியும் – எந்நிலையிலும் தடம் மாறாதவர் இவர்.

கழக வரலாற்றில், முதல் நெல்லை மாவட்ட தி.மு.க. மாநாட்டுச் செயலாளர்.

கழகப் பொதுக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

மொழிப் போர் வீரர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“தான் கருப்புச் சட்டை அணிந்த காலத்திலேயே தன்னை அழைத்து, கூட்டம் நடத்தியவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### நாகையில் மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அறிவாலயம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

நாகை, மார்ச் 3 -

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இன்று நாகை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இன்று (3ம் தேதி) காலை 9.00 மணிக்கு நாகை புத்தூர் ஆர்ச் அருகே கலைஞர் அரங்கில் நடைபெறும் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் மகன்ஜி.மகிபாலன் எஸ். உமாமகேஸ்வரி திருமணத்தை தலைமை தாங்கி நடத்தி வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள நாகை ஐ.டி.ஐ. மைதானத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

பின்னர் நாகை பால் பண்ணைச்சேரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தையும், தளபதி அறிவாலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவ சிலையையும் திறந்து வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து புதிதாக கட்டப்பட்டுள்ள தளபதி அறிவாலயத்தில் நாகை மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரை யாற்றுகிறார்.

விழாக்களில் அமைச்சர் பெருமக்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலளார்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.



தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவையொட்டி திருப்பத்தூர் மாவட்ட திமுக சார்பில் வாணியம்பாடி மாவட்ட கழக அலுவகத்தில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி தலைமையில் கேக் வெட்டி, உறுதிமொழி எடுத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் டி.கே.மோகன், ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.தாமோதிரன், திருப்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.ஆர்.திருப்பதி, உதயேந்திரம் பேரூர் செயலாளர் ஆ.செல்வராஜ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர்எஸ்.ராஜா, மாவட்ட விவசாயி அணி அமைப்பாளர் பூ.சதாசிவம், மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சையத்அபீப்தங்கல் மற்றும் மாவட்ட அணிகளின் து.அமைப்பாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தார்கள்.

# பெரம்பூரில் நல உதவிகள் வழங்கல்!

சென்னை, மார்ச். 3–

தமிழக முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் பெரம்பூர் தெற்கு பகுதி 45 அ வட்டத்தில் உள்ள கணேசபுரம் சென்னை மாநகராட்சி பள்ளியில் மாவட்ட துணை அமைப்பாளர் நி.எழிலரசன் ஏற்பாட்டில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி பிறந்தநாளை கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் மேகலாதிருமலை, கலை இலக்கியப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் சி.ஏழுமலை வட்ட துணை செயலாளர் எம். அஞ்சலை மு.ஜானகிராமன் நி.தமிழரசன் வி.ராமன் S. வெங்கடேசன் D. செல்வம் என்.பாண்டியன் மிதுன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



ஆற்காடு நகர தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி 1000க்கும் மேற்பட்டவர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். வினோத் காந்தி, நகர செயலாளர் ஆர்க்காடு சரவணன், டாக்டர் பி.என்.எஸ்.சரவணன், பி.என்.எஸ்.ராஜசேகரன் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.



விழுப்புரம் நகர மாவட்ட பிரதிநிதி சக்கரபாணி அவர்களின் மறைவுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி அவர்கள் அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ் , மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, நகர நிர்வாகிகள் கற்பக மூர்த்தி, என்.என்.இளங்கோ, வி.புருசோத்தமன், சோமு , ஜமாலுதீன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் பா. ஸ்ரீ வினோத், தொண்டர் அணி கபாலி, தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ்பாபு, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, ஆதிதிராவிடர் நலக்குழு அணி செல்வ பிரேம், வழக்கறிஞர் அணி மு.காளிதாஸ், மாணவரணி லெனின் விஜய், கலை இலக்கிய அணி கவி மோசஸ், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி இளையராஜா, அயலக அணி ஓம் அரி, தொழிலாளர் அணி சந்தோஷ், ஏழுமலை, தொமுச சலீம், தகவல் தொழில்நுட்ப அணி மூ.தேவா, அபுபக்கர், இளைஞரணி பி.கே.சங்கர், வெற்றி, முருகன், மோகன், நல்லசிவம், வார்டு கவுன்சிலர்கள் , சுரேஷ்பாபு, பத்மநாபன், சிவகுமார் , வைத்தியநாதன், வார்டு செயலாளர்கள் ராஜா, செல்லையன், சீனுவாசன், கருணா, மாணவர் அணி கார்த்தி, விஜய், கிருஸ்துராஜ், ராஜ்குமார், கிரண் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

## சமூக மேம்பாட்டு அமைப்புகளின் முன்னோடிகள் கருத்து!

# தனித்துவம் நிறைந்த மக்கள் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின்!

### 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச், 3–

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவின் போது அவர் அரசின் சாதனைளை பட்டியலிட்டு காட்டாமல் அனைத்திற்கும் மேலாக தமிழ் நிலத்தின் தலையாய உரிமை, அது சார்ந்த கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது அவசியம் என தமிழ்நாட்டின் தனித்துவத்தை தேசத்திற்கு உணர்த்தியுள்ளார். என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அது வருமாறு:–


தினகரன்

மார்ச் 2, 2025 ஞாயிற்றுக்கிழமை

தனித்துவமான தலைவர்

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள், மாநிலம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பிரதமர் மோடி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் மட்டுமன்றி, அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் அவருக்கு மகிழ்வுடன் வாழ்த்து தெரிவித்தனர். இந்த கொண்டாட்டத்தில் கூட, தனக்கான முக்கியத்துவத்தை அவர் உருவாக்காமல், தமிழ் நிலத்திற்கான உரிமைகளுக்காக முழக்கமிட்டிருப்பது தேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக தனது பிறந்த நாளையொட்டி, வீடியோ செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். இதுதான் அவர் 'தனித்துவம் நிறைந்த ஒரு மக்கள் தலைவர் என்பதை மீண்டும் உணர்த்தியுள்ளது' என்கின்றனர் சமூக மேம்பாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள், மாநிலம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பிரதமர் மோடி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் மட்டுமன்றி, அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் அவருக்கு மகிழ்வுடன் வாழ்த்து தெரிவித்தனர். இந்த கொண்டாட்டத்தில் கூட, தனக்கான முக்கியத்துவத்தை அவர் உருவாக்காமல், தமிழ் நிலத்திற்கான உரிமைகளுக்காக முழக்கமிட்டிருப்பது தேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக தனது பிறந்த நாளையொட்டி, வீடியோ செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். இது தான் அவர் 'தனித்துவம் நிறைந்த ஒரு மக்கள் தலைவர் என்பதை மீண்டும் உணர்த்தியுள்ளது' என்கின்றனர் சமூக மேம்பாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள்.

என்னுடைய பிறந்தநாள் வேண்டுகோளாக, உங்களுக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்கிறேன். இன்றைக்கு தமிழ்நாடு தன்னுடைய உயிர்பிரச்சினையான மொழிப்போரையும், தன்னுடைய உரிமை பிரச்சினையான தொகுதி மறுசீரமைப்பையும் எதிர் கொண்டுள்ளது. இதன் உண்மையான நோக்கத்தை, நீங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். தொகுதி மறுசீரமைப்பு என்பது, நமது மாநிலத்தின் சுயமரியாதை, சமூகநீதி மற்றும் நம்முடைய சமூக மேம்பாட்டுத் திட்டங்களை பெரிதும் பாதிக்கும். இதை நீங்கள் மக்களிடம் கொண்டு செல்லவேண் டும். ஒவ்வொருவரும் மாநிலம் காக்க எழுந்து நிற்க வேண்டும். இந்தியாவுக்கே வழிகாட்டியாக நாம் போராட்டத்தை தொடங்கினோம்.

இப்போது கர்நாடகா, பஞ்சாப், தெலங்கானா போன்ற மாநிலங்களில் இருந்து நமக்கான ஆதர வுக்குரல் வந்துள்ளது. இதை பார்த்த ஒன்றிய அரசு இந்தியை திணிக்கவில்லை என்று சொல்கிறது. ஆனால் அதற்கான அனைத்து முன்னெடுப்புகளை யும் எடுத்துக் கொண்டே இருக்கிறது. அதேபோல் தமிழ்நாட்டுக்கான தொகுதிகளை குறைக்க மாட் டோம் என்று மட்டும் தான் சொல்கிறார்கள். தவிர, மற்ற மாநிலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மாட்டோம் என்று சொல்லவில்லை.

நாம் கேட்பது மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை பிரிக்காதீர்கள். நாட்டின் வளர்ச்சிக் காக மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தென்மா நிலங்களை தண்டிக்காதீர்கள். அப்படி நடந்தால் அதை தமிழ்நாடும், திராவிட முன்னேற்ற கழகமும் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். நாம் ஒரு உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டுக்காக நாம் ஒன்றுபட்டு போராட வேண்டும். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும், இந்த வேண்டுகோள் தான் தமிழக முதல்வர் ஒரு தனித்துவம் வாய்ந்த தலைவர் என்பதை மீண்டும் ஒரு முறை பறைசாற்றியுள்ளது.

அதாவது இக்கட்டான அரசியல் சூழல்கள், நிதிசார்ந்த பிரச்சினைகள், அரசின் சாதனைகளை பட்டியலிட்டும் காட்டவில்லை. இவை அனைத்திற் கும் மேலாக, தமிழ்நிலத்தின் தலையாய உரிமைகள் முக்கியம். அது சார்ந்த கொள்கை முரண்பாடுகளை மக்கள் மன்றத்தில் கொண்டு சேர்ப்பது மிகவும் அவ சியம். அதன் மூலம் தமிழகத்தின் தனித்துவத்தை தேசத்திற்கு உணர்த்த வேண்டும் என்பதே அவரது பிரதான நோக்கம். இதை தனது பிறந்த நாள் விழா பொதுக்கூட்ட மேடையிலும் வெளிப்படுத்தியுள்ளார் முதல்வர். நம்முடைய தோழமை கட்சி தலைவர்கள் அனைவரும், ஒரே மேடையில் இணைந்திருக்கி றோம். நாம் தமிழ்நாட்டுக்கான உரிமைக்குரலை. எழுப்புவதற்கான வாய்ப்பை இந்த மேடை வழங் கியுள்ளது. இந்த மேடையே உரிமைக்களமாக, வெற்றிக்கான அடித்தளமாக அமையும் என்று முழக்கமிட்டுள்ளார். இதனால் தான் தனித்துவமான முதல்வராக மட்டுமன்றி, தலைவராகவும் உயர்ந்து நிற்கிறார் அவர் என்கின்றனர் சமூக மேம்பாட்டு அமைப்புகளின் முன்னோடிகள்.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு புகழ் சேர்த்துள்ளது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தீவனூரில் நடைபெற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்களின் பிறந்தநாள் விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 500 நபர்களுக்குநலத்திட்ட உதவிகளை வழங்கினார் .உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



வேலூர் மாநகர திமுக அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார்,மாவட்ட ஊராட்சி குழுதலைவர் மு.பாபு, பொதுக்குழு உறுப்பினர்கள் மா.ப.அன்புநிதி எஸ்.கதிரேசன்,பகுதி கழக செயலாளர்கள் வி.ஜிகே. சுந்தரவிஜி, பாலமுரளி கிருஷ்ணன், சசிக்குமார்,எம்.ஏ.கணேஷ்சங்கர், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.முருகன், அறங்காவலர் குழு உறுப்பினர் நீதிமன்ற அருணாசலம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.டி.பாலாஜி, மீனவர் அணிஉமா சந்திரன், சீனிவாச காந்தி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்த நாள் விழா!

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் நல உதவிகள் - தொடர் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ அறிவிப்பு!



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மக்கள் போற்றும் மனித நேய தலைவர் திராவிடத் தலைவன் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள் மற்றும் தொடர் பொதுக்கூட்டங்கள் நிகழ்ச்சிகள் விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார். அது விவரம் வருமாறு:-

| நாள் | இடம் | உரையாற்றும்சிறப்புபேச்சாளர்கள் | கூட்டஏற்பாடு |
|---|---|---|---|
| 05.03.2025 | ரெட்டணை | தமிழ்தாசன் | V.மணிமாறன் மயிலம்வடக்கு ஒன்றியசெயலாளர் |
| 06.03.2025 | வெள்ளிமேடு பேட்டை | தமிழ்தாசன் | அ.ராஜாராம் ஒலக்கூர்மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 07.03.2025 | ஒலக்கூர் | திருமதி.சேலம்சுஜாதா | கோ.சொக்கலிங்கம் ஒலக்கூர்கிழக்கு ஒன்றிய செயலாளர் |
| 08.03.2025 | சிறுவாடி | முரசொலிமூர்த்தி | வ.ரவிச்சந்திரன் மரக்காணம் மத்தியம் ஒன்றிய செயலாளர் |
| 09.03.2025 | புதுப்பாக்கம் | எழும்பூர்கோபி | ரா.தயாளன் மரக்காணம் கிழக்கு ஒன்றியசெயலாளர் |
| 10.03.2025 | தழுதாளி | எழும்பூர்கோபி | G.செழியன் மயிலம் மத்தியம் ஒன்றிய செயலாளர் |
| 11.03.2025 | பெரமண்டூர் | குமுடிபூண்டிதமிழ்சாதிக் | V.மணிமாறன் மயிலம்வடக்கு ஒன்றிய செயலாளர் |
| 12.03.2025 | பெரியதச்சூர் | எழும்பூர்கோபி | ரா.சேதுநாதன் மயிலம்தெற்கு ஒன்றிய செயலாளர் |
| 13.03.2025 | பள்ளிகுளம் | அரூர்மணிவண்ணன் | ஆர்.இளம்வழுதிவல்லம் மத்தியம் ஒன்றியசெயலாளர் |
| 14.03.2025 | பென்னகர் | ஆலந்தூர்ஒப்பில்லாமணி | அ.சீ.அண்ணாதுரைவல்லம் வடக்கு ஒன்றியசெயலாளர் |
| 15.03.2025 | தென்புத்தூர் | காவேரிபட்டினம்இளையராஜா | பெ.துரை வல்லம்தெற்கு ஒன்றிய செயலாளர் |
| 16.03.2025 | ஓமந்தூர் | ஆலந்தூர்மலர்மன்னன் | A.பழனி மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 17.03.2025 | ஓங்கூர் | வேலூர்கென்னடி | கோ.சொக்கலிங்கம் ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் |
| 18.03.2025 | வைரபுரம் | திருவெற்றியூர்வாசுகருணாநிதி | அ.ராஜாராம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 19.03.2025 | கூனிமேடு | குடியாத்தம்பாரி | ரா.தயாளன் மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளர் |
| 20.03.2025 | அப்பம்பட்டு | ஓசூர்அப்துல்ரஹிமான் | R.விஜயகுமார் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் |
| 21.03.2025 | மழவந்தாங்கல் | பேரணாம்பட்டு ராஜேந்திரபிரசாத் | M.விஜயராகவன் செஞ்சி மத்தியம் ஒன்றிய செயலாளர் |
| 22.03.2025 | நல்லாண் பிள்ளை பெற்றாள் | திருமதி.ஆரணிமாலா | B.K.பச்சையப்பன் செஞ்சிமேற்கு ஒன்றியசெயலாளர் |
| 23.03.2025 | வளத்தி | பவானிகண்ணன் | L.P.நெடுஞ்செழியன் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் |
| 24.03.2025 | அவலூர்பேட்டை | பசும்பொன்ரவிச்சந்திரன் | திருமதி.சாந்திசுப்பரமணி மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 25.03.2025 | ஆச்சிப்பாக்கம் | திருமதி.ஆரணிமாலா | கோ.சொக்கலிங்கம் ஒலக்கூர்கிழக்கு ஒன்றிய செயலாளர் |
| 26.03.2025 | தென்பாலை | கரூர்முரளி | M.P.நாராயணமூர்த்தி மேல்மலையனூர்மத்தியம் ஒன்றிய செயலாளர் |
| 27.03.2025 | மரக்காணம் பேரூர் | போடிகாமராஜ் மரக்காணம் | A.ரவிக்குமார் நகரசெயலாளர் |
| 28.03.2025 | சித்தனி | திருமதி.குடியாத்தம்புவியரசி | G.செழியன் மயிலம்மத்தியம் ஒன்றிய செயலாளர் |
| 29.03.2025 | கூட்டேரிப்பட்டு | ஆவடிபாஸ்கர் | ரா.சேதுநாதன்மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளர் |
| 30.03.2025 | புளியனூர் | ஆம்பூர்தருமன் | V.மணிமாறன் மயிலம்வடக்கு ஒன்றிய செயலாளர் |
| 31.03.2025 | மொளசூர் | ஈரோடுஇறைவன் | A.பழனி மரக்காணம்மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 01.04.2025 | கீழ்புத்துப்பட்டு | ஆடுதுறைஉத்திராபதி | ரா.தயாளன் மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளர் |
| 02.04.2025 | முன்னூர் | எட்டயபுரம்தமிழ்பிரியன் | வ.ரவிச்சந்திரன் மரக்காணம் மத்தியம் ஒன்றிய செயலாளர் |
| 03.04.2025 | வடம்பூண்டி | ஈரோடு இளையகோபால் | அ.ராஜாராம் ஓலக்கூர்மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 04.04.2025 | கொல்லியங் குணம் | தக்கோலம்தேவபாலன் | G.செழியன் மயிலம் மத்தியம் ஒன்றியசெயலாளர் |
| 05.04.2025 | நெடிமொழி யனூர் | குமரிபிரபாகரன் | ரா.சேதுநாதன் மயிலம்தெற்கு ஒன்றியசெயலாளர் |
| 06.04.2025 | வடநெற்குணம் | ஆத்தூர்சபரி | வ.ரவிச்சந்திரன் மரக்காணம் மத்தியம் ஒன்றிய செயலாளர் |
| 07.04.2025 | மானூர் | சைதைசாதிக் | திரு.A.பழனி மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் |
| 08.04.2025 | நெகனூர் | ஆத்திப்பட்டுசாம்ராஜ் | அ.சீ.அண்ணாதுரை வல்லம் வடக்கு ஒன்றியசெயலாளர் |
| 09.04.2025 | வல்லம் | மன்னைசோம.இளங்கோவன் | ஆர்.இளம்வழுதிவல்லம் மத்தியம் ஒன்றியசெயலாளர் |
| 10.04.2025 | தளவாளப்பட்டு | சேலம்கோவிந்தன் | பெ.துரை வல்லம்தெற்கு ஒன்றியசெயலாளர் |

எனவே ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: கூட்ட நிகழ்ச்சிகளில் நலத்திட்டங்கள் வழங்கிட இடம் மற்றும் நாள் உறுதிபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.